மலர் 1 இதழ் 3 ஜனவரி, 2017 ISSN : 2454-3993

# நவீனகால வளர்ச்சியில் சாதியக் கட்டமைப்பு

**ம. மகாலட்சுமி**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
அரசு கலைக்கல்லூரி, கோயம்புத்தூர்.

"சாதி இரண்டொழிய வேறில்லை" என்று பழந்தமிழ் கூற்று வழக்கத்தில் உள்ளது. ஆனால் இன்று சாதிப்பற்று இல்லாத மனிதர்களே இல்லை எனலாம். சமுதாயத்தில் இன்று சாதிகள் சற்று உயர்வு பெற்று சங்கங்கள் அமைத்து அரசியல் கட்சியில் உருவெடுத்து நாட்டை பிளவுபடுத்திக் கொண்டிருக்கின்றன. நாடு சுதந்திரம் அடைந்து பல ஆண்டுகள் கடந்த போதும் அறிவியல் வளர்ச்சியில் உலக நிகழ்வுகளைத் தன் இல்லத்திற்குக் கொண்டு வரும் மனிதன், மூடப்பழக்கமாகிய சாதியை விட்டொழிக்கவில்லை. சமுதாயத்தில் உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி, என மக்களைப் பாகுபடுத்தி மக்களை மக்களே அடிமைப்படுத்திப் பலியிடுகின்றனர். சாதிச் சண்டையால் சமூகம் முன்னேற்றம் அடையப் போவதில்லை. பழங்காலத்திலிருந்தே மக்களிடையே இந்தச் சாதிப்பிரிவினை உருவெடுத்துள்ளது. அக்காலத்தில் அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என நான்கு பிரிவுகள் இருந்ததாக தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும் இருக்க வேண்டிய இடத்தில் மாயாஜால வடிவம் கொண்டு சாதிவெறி தலைவிரித்து ஆடுகிறது. தேர்தல் சமயத்தில் கட்சிவெறி, சாதிவெறியாக மாறிப் புதுக்கோணம் கொள்வதை எல்லா இடத்திலும் காணலாம். நாடெங்கும் சாதிப்பிரிவினை பேராற்றல் பெற்றுவருகிறது. சாதிப்பிரிவுகள் அவரவர் செய்யும் தொழிலினால் ஏற்படுவதேயன்றி மரபினால் ஏற்பட்டதன்று. ஏனெனில் எல்லாச் சாதியினரும் எல்லா தொழிலும் ஈடுபட்டு இருப்பதைக் காணலாம்.

பழங்காலத்தில் திருவிழாக்கள் என்பது சமூகத்தில் உள்ள அனைவரும் ஒன்று கூடி மகிழும் நிகழ்ச்சியாக இருந்தது. திருவிழாக் காலங்களில் மக்கள் அனைவரும் ஒன்று கூடி மகிழ்ந்து கொண்டாடிய பண்பு போய் இன்று அவையே சாதி சண்டைகள் தோன்றும் இடமாக உள்ளன. சாதி என்ற பெயரால் இன்றைய

மனிதன் சமுதாயத்திற்குத் தீங்கை விளைவிக்கின்றான். அவனே வன்முறைகளுக்கும், கலவரங்களுக்கும் காரணமாகின்றான். சாதி என்ற இரண்டு எழுத்துகள் சமுதாயத்தில் விலைமதிக்க முடியாத மனித உயிர்களைப் பழிவாங்கி உள்ளன. பெரும்பாலும் சாதிக்கலவரங்களுக்கு அரசியல்வாதிகளும், மதத்தலைவர்களுமே காரணமாக இருக்கிறார்கள். அவர்கள் சாதிக்கலவரங்களுக்கு தீ மூட்டிவிட்டு அந்த நெருப்பில் குளிர்காய்கின்றனர். சாதித்தலைவர்கள் அரசியலில் தாங்கள் ஆதாயம் பெற வேண்டி சாதிச்சங்கங்களை வளர்த்து தாங்கள் உயர்வதற்கு வழி வகுத்துக்கொள்கிறார்கள். இதுபோன்ற சமுதாயத்தில் அனைத்துச் சாதிகளும் ஒழிந்து, மனிதம் கொண்ட மானுடசாதி உருவாக வேண்டும்.

சமுதாயத்தில் தோன்றும் வன்முறைகளுக்குக் காரணம் சாதி வெறியே ஆகும். பழங்காலத்தில் தொழில் முறையினால் ஏற்படுத்தப்பட்ட பாகுபாடுகள் இன்று சாதிவன்முறைகள் பிறக்க அடித்தளமிட்டுள்ளன. இன்றைய காலகட்டத்தில் மனித சமுதாயம் சாதிக்கொடுமைகளால் பல்வேறு இன்னல்களுக்கும் ஆளாகியுள்ளது. இன்று அனைத்து மனிதர்களிடமும் சாதிப்பற்று மேலோங்கி உள்ளது. தமிழ்ச்சங்கங்கள் வைத்து தமிழ் வளர்த்த நாட்டில் சாதிச் சங்கங்கள் புற்றீசல்களைப் போலப் புறப்பட்டு நாட்டை நாசம் செய்ய எண்ணுகின்றன. இந்தியாவில் மூவாயிரத்திற்கு மேற்பட்ட சாதிகள் காணப்படுகின்றன. இச்சாதியினர் ஒவ்வொன்றும் மற்ற சாதிகளில் இருந்து, தாங்களை மேம்பாடு உடையனவாகக் கருதுகின்ற்ர். சமூக வாழ்வில் ஒவ்வொரு சாதியினரும் பிற சாதியினரை அயலராகவே கருதி வந்துள்ளனர். மேல்நாட்டார் வருகைக்குப் பிறகு இந்திய சமுதாயத்தில் பல நிலைகளில் மாறுதல்கள் ஏற்பட்ட பிறகும் சாதிக்கு அளிக்கும் முக்கியத்துவம் குறையவில்லை.

சாதிப்பற்று மற்ற சாதியினரை வெறுக்கச் செய்கிறது. நாட்டுணர்ச்சி வளர முடியாத சூழ்நிலையை உருவாக்கி விடுகின்றது. சாதியானது போராட்டங்களுக்கும் கலவரங்களுக்கும் காரணமாக அமைந்து விடுவதைக் காண முடிகிறது. சாதியின் பெயரால் ஆங்காங்கே கலவரங்கள் நடைபெறுகின்றன. கை, கால்விரல்களில் நகங்கள் நீண்டு வளர்ந்தால் அதை நறுக்கி விடுவதைப்போல சமூகத்தில் தோன்றி வளர்ந்து ஆட்டிப்படைத்து வரும் சாதியை வேரோடு அகற்ற வேண்டும்.

இந்திய சமுதாயத்தை குறிப்பாகத் தமிழ்ச்சமுதாயத்தை சாதி எனும் பெரு நோய் அரித்துவருவதை ஒழிக்க வள்ளுவர் காலம் முதல் இன்று வரையிலும் முயன்றாலும் எதிர்பார்த்த நோக்கம் முழுமையாக நிறைவேறவில்லை. பெரியார் சாதி ஒழிப்பினைப்பற்றி, பல காலம் பேசியும், எழுதியும், உழைத்தும் வந்தார். எனினும் போதிய பலன் கிடைக்கவில்லை. மாறாக இன்றைய நிலையில் சாதியின் பெயரால் பல சங்கங்கள் தோன்றி உள்ளன. அவைகள் அனைத்தும் தத்தம் சாதியின் போலிப் பெருமைகளைப் பறைசாற்றிக்கொண்டுள்ள காரணத்தால் தமிழ்ச்சமுதாயத்தில் தேவையற்ற பல விளைவுகளும், பூசல்களும் தோன்றி ஒற்றுமையுணர்வு குன்றி வேற்றுமை பெருகி உள்ளது.

சாதிய இறுக்கம் இன்னும் கட்டுக்குலையாமல் இருப்பதற்குக் காரணம் சமுதாயத்தில் நிலவும் அகமண முறைதான். கலப்பு மணங்களால் சாதி ஆதிக்கத்தில்

விரிசலை ஏற்படுத்த முடியும் என்ற நிலை இன்று பரவலாக உள்ளது. நிர்வாகப் பண்பாட்டு மாற்றங்கள் தமிழ்நாட்டைத் தாக்கத் தொடங்கியபோது தமிழ்நாட்டின் சாதி அமைப்பைப் பிராமண, பிராமணரர் அல்லாதோர், அரிசனங்கள் என்று வகுத்துக்கூறுவது மரபாக இருந்தது. சாதியானது தமிழனுக்குப் பிடித்திருக்கும் மூடநம்பிக்கையாளர்களின் தொற்று நோய். அறிவியல் யுகத்திலும் சாதி எனும் தீண்டாமை வளர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

சாதியின் செயல்பாடு மக்களை ஒன்று சேர்க்கக்கூடிய கண்ணி அமையவில்லை. மாறாக வெட்டிவிடுகின்ற கத்திரிக்கோல் போன்று அமைந்துள்ளது. இரு மனங்கள் இணையும் காதலில்கூட சாதி என்பது முன்னேற்றப் பாதைக்கு தடைக்கல்தான். இந்த கற்களைச் சிலர் தாண்டுகிறார்கள். சிலர் அடிபட்டுவிடுகிறார்கள். காதலிக்கிறவர்களின் திருமண முயற்சி பெரிய அளவில் சாதியால்தான் தடை ஏற்படுகின்றது. சாதி எதிர்ப்பால் காதல்மணம் செய்தவர்களின் கதைகள் சாவில் முடிவதை வந்துள்ளதை நாளும், நாளேடுகளில் வாசிக்கிறோம்.

இந்திய அரசின் கணக்குப்படி சராசரியாக தொள்ளாயிரம் முதல் ஆயிரம்பேர் வரை தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்கள் ஆண்டுதோறும் உயர் சாதி இந்துக்களால் கொலை செய்யப்படுகிறார்கள் என்ற செய்தி இந்திய நாட்டின் சாதி வெறிக்கொடுமையைச் சுட்டுவதாக உள்ளது. சாதிப்பற்று ஏனைய சாதியினரை வெறுக்கச்செய்கிறது. மேலும் இது நாட்டுப்பற்றையும், மொழிப்பற்றையும், தடை செய்யும் தடைக்கற்களாகக் காட்சி தருகின்றது.  மக்களிடத்தில் உள்ள மனிதநேயச் சிந்தனைகளை மழுங்கடித்துக் குறுகிய பார்வை ஏற்பட வழிவகுக்கிறது.

இன்றைக்கு நமது நாட்டில நிலப்பரப்பு அளவில் ஒருமைப்பாடு பேசப்படுகின்றதே தவிர மனித ஒருமைப்பாடு பேசுவதாகத் தெரியவில்லை. ஒருமைப்பாடு முதலாவதாக பேசவேண்டுவது மனிதனுக்குத்தான். ஏனெனில் மண்ணே மனிதர்களால்தான் பெருமைப்படுகிறது. மனிதர்கள் வாழாத மண் நாடாக மதிக்கப்படுவதில்லை. வெறுமனே அது பாலைவனமாகத்தான் இருக்கும். சாதி என்று கூறப்படுவது சமுதாய அமைப்பில் இயங்குகின்ற ஒரு தனிப்பட்ட குழுவினைக் குறிப்பதாகும். இக்குழுவில் இடம்பெறக்கூடிய தகுதி பிறப்பால் மட்டுமே அமைகிறது.

சாதியினால் விளையும் கேடுகளை அறிய முடியாத, படிக்காத பாமரர்களைவிட அனைத்தையும் கற்றுத் தேர்ந்து தன்னைப் படித்த மேதையாக எண்ணிக்கொண்டு இருக்கும் அறிவாளிகளிடமும் சாதி பற்றிய எண்ணங்கள் அதிகம் காணப்படுகின்றன. எனவே இன்றைய தலைமுறை இதனை உணர்ந்து செயல்பட்டால், எதிர்வரும் தலைமுறை சாதிப்பாகுபாடுகளற்ற தலைமுறையாக உருவாகும்.

உலகெங்கிலும் வாழக்கூடிய மனிதர்களிடையே சாதி என்னும் வேறுபாடு இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் இந்திய தேசத்தில் வாழும் மனிதர்களிடையே மட்டும் சாதி வேறுபாடுகள் ஆழமாகப் பரவியுள்ளன. நம் சமுதாயத்தில் வாழும் மக்களின் மனங்களில் உள்ள சாதி வேறுபாடுகளைக் களையவேண்டுமானால் சாதி மறுப்பு திருமணங்கள் அதிகமாக நடைபெற வேண்டும். இல்லையெனில் மூடப்பழக்கமாகிய சாதிப்பாகுபாடுகளைக் களைவது கடினம்.